**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No. 641/2022**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-1/PW-1 |
| Name | : ஆதிலட்சுமி |
| Father/Husband's Name | : ரவி |
| Village | : நந்திவரம் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 47 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17.10.2024.

**முதல் விசாரணை–**

நான் 5 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு 3 மகன்கள் உள்ளனர். அவர்களின் பெயர்கள் தினகரன், தினேஷ், சதிஷ். சுமார் 1 1/2 ஆண்டுக்கு முன்பு எனது மகன் தினகரனுக்கும் ஆஜர் எதிரி சூர்யாவுக்கும் வாய் தகராறு நடந்துள்ளது. பிறகு 1 வாரம் சென்று இந்நீதிமன்றத்தில் ஆஜரிலுள்ள எதிரிகளான சூர்யா, விஜயகுமார், கார்த்தி மற்றும் ஒரு ஆஜர் எதிரி ஆகியோர் எனது வீட்டிற்கு மாலை 4 மணிக்கு வந்தனர். அப்போது நான், எனது மாமியார் பட்டம்மாள், எனது மகன் தினேஷ் ஆகியோர் வீட்டில் இருந்தோம். மேற்படி எதிரி சூர்யா என்பவன் என்னுடைய வீட்டின் கதவை உடைத்து வீட்டினுள் வந்து பொட்டை , பாடு என்று அசிங்கமாக திட்டினான். மேற்படி ஆஜர் எதிரியான சூர்யா என்னை கையால் என்னை முதுகில் அடித்தான்.

என்னுடைய மகன் தினேஷ் மற்றும் என்னுடைய மாமியார் பட்டம்மாளையும் சூர்யா கையால் அடித்தான்.

என்னுடைய மகன் தினேஷ் ஏன் அடிக்கிறாய் என்று கேட்டபோது என்னையும் எனது மாமியாரையும் சூர்யா கீழே தள்ளிவிட்டான். பிறகு , அவன் கையில் வைத்திருந்த கத்தியால் எனது மகன் தினேஷின் பின் மண்டையில் அடித்தான். மீதியுள்ள 3 எதிரிகள் வீட்டின் வெளியே வாகனத்தை வைத்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தனர். பிறகு, எங்களை அடித்துவிட்டு அந்த வாகனத்தில் ஏறி சென்று விட்டனர். அடிப்பட்ட என் மகன் தினேஷை நந்திவரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அவனுக்கு மண்டையில் தையல் போடப்பட்டது. இந்த சம்பவத்தை குறித்து நான் கூடுவாஞ்சேரி காவல் நிலையத்தில் 1 வாரம் கழித்து புகார் தெரிவித்தேன். மேற்படி எதிரிகள் எங்களை மிரட்டியதால் 1 வாரம் கழித்து நான் புகார் தெரிவித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அந்த **புகாரானது அ.த.சா. 1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.

# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No. 641/2022

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-2/PW-2 |
| Name | : ரவி |
| Father/Husband's Name | : வெங்கடேசன் |
| Village | : நந்திவரம் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 49 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17.10.2024.

**முதல் விசாரணை–**

நான் லாரி டிரைவராக வேலை செய்கிறேன். நான் 5 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். அ.சா.1 ஆதிலட்சுமி எனது மனைவி. எனக்கு தினகரன்,தினேஷ் , சதிஷ் ஆகிய 3 மகன்கள் உள்ளனர். கடந்த 2021, ஜுன் மாதம் ஒரு நாள் எனது மகன் தினகரனுக்கும் ஆஜர் எதிரிகளான சூர்யா, விஜயகுமார், கார்த்தி மற்றும் ஒரு ஆஜர் எதிரி ஆகியோருக்கிடையே வாய் தகராறு நடந்துள்ளது. அதனைத்தொடர்ந்து 17.06.2021 ஆம் தேதி நான், என்னுடைய மனைவி, மகன் தினேஷ் மற்றும் எனது அம்மா பட்டம்மாள் ஆகியோர் வீட்டிலிருந்தபோது சுமார் மாலை 4 மணிக்கு ஆஜர் எதிரிகளான நால்வரும் எனது வீட்டருகே வந்தனர். ஆஜர் எதிரி சூர்யா எனது வீட்டின் கதவை உடைத்து உள்ளே வந்து டிவி மற்றும் வீட்டிலுள்ள பொருட்களை கத்தி மற்றும் கம்பி ஆகியவற்றால் உடைத்தார்.

எனது மகன் தினேஷ் சூர்யாவை ஏன் என்று இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டபோது, சூர்யா ஓத்தா தேவிடியா பையா பாடு உன்னோட அண்ணன் எங்கடா

என்று கேட்டார். பிறகு, அவன் இல்லைனா என்னடா இவன அடிங்கடா என்று எதிரி சூர்யா சொன்னான். மேலும் சூர்யா மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து திருப்பி வைத்து தினேஷின் மண்டையில் அடித்தான். எதிரி விஜயகுமார் தினேஷை எட்டி உதைத்தார். எதிரி விஷ்ணு தினேஷின் முகம் மற்றும் முதுகில் குத்தினான். இதை தடுத்த அவனது அம்மாவை எதிரி கார்த்தி கீழே தள்ளிவிட்டான். என்னுடைய அம்மாவையும் கீழே தள்ளிவிட்டான். மேற்படி நான்கு எதிரிகளும் எங்களை பார்த்து இன்னைக்கு நைட்டுக்குள்ள உங்களை கொலை செஞ்சிடுவோம் என்று மிரட்டி விட்டு சென்றனர். அதனால் எங்களுக்க பயமாக இருந்தது. எனது மகன் தினேஷுக்கு தலையில் ஏற்பட்ட காயத்திற்கு கூடுவாஞ்சேரி அரசு மருத்துவமனையில் தையல் போடப்பட்டது.

அன்றைய தினமே கூடுவாஞ்சேரி காவல்நிலையத்தில் புகார் அளிக்க சென்றோம் ஆனால், பயந்து கொண்டு வீட்டிற்கு வந்து விட்டோம். திரும்ப இதேபோல் பிரச்சினை நடந்துவிடும் என்று அறிந்துகொண்டு 24.06.2021 அன்று புகார் கொடுத்தேன். போலீசார் என்னை மூன்று முறை வீட்டிற்கு வந்து வீட்டை பார்வையிட்டு விசாரணை செய்தார். இந்த சம்பவம் நடந்து 1 வருடத்திற்குள் மேற்படி எதிரிகள் சேர்ந்து எனது மகன் தினகரனை உடல் முழுவதும் வெட்டி விட்டார்கள். அது சம்பந்தமாக வேறொரு புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை இல்லை.**

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.